

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | அக்டோபர் 18, 2018 | புரட்சி 17 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00


## பெண்ணுரிமைப் போற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளுக்கு வரவேற்பு; ஹைடிரோ கார்பன் திட்டங்களை நிறுத்துக; ஆளுநர் பதவியே தேவை இல்லை

## 7 பேர் விடுதலையை ஆளுநர் தாமதப்படுத்தக் கூடாது

# திருப்பூர் செயலவையின் தீர்மானங்கள்

திருப்பூரில் அக்.13ஆம் தேதி கழக தலைமைக் குழு ஆலோசனையைத் தொடர்ந்து அடுத்த நாள் அக்.14ஆம் தேதி கழக செயலவை திருப்பூர் வாலிப்பாளையம் ‘டையர்ஸ் அசோசியேஷன்’ அரங்கில் பகல் 11 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் தொடங்கியது. தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி கடவுள் ஆத்மா மறுப்பு கூறினார். திருப்பூர் மாவட்ட செயலாளர் நீதிராசன் வரவேற்புரை யாற்றினார். அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி செயலவையின் நோக்கங்களை விளக்கி அறிமுக உரையாற்றினார். 40 செயலவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை முன் வைத்தனர். மாலை 6 மணி வரை செயலவை நீடித்தது. பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். செயலவை தீர்மானங்களை முன்மொழிந்து கழகத் தலைவர் நிறைவுரை யாற்றினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

பெண்களின் உரிமைகளுக்கும் விடுதலைக்கும் வழிவகுக்கும் உச்சநீதிமன்றம் வழங்கிய மூன்று தீர்ப்புகளை இந்த செயலவை பாராட்டி வரவேற்கிறது.

ஒன்று சபரிமலை அய்யப்பன் கோயிலில் இடையில் சில ஆண்டுகளாக “தீட்டாகிறார்கள்” என்று காரணம் கூறி பெண்களை அனுமதிக்க மறுத்து வந்த பாகுபாட்டை உச்சநீதிமன்றம் செல்லாதாக்கியிருக்கிறது.

மற்றொன்று இந்தியத் தண்டனை சட்டத்தில் 497 வது பிரிவு செல்லாது என்ற தீர்ப்பாகும். ஒரு மனைவி கணவன் சம்மதத்துடன் வேறு ஒருவனை உடலுறவு கொள்ள முடியும். கணவன் சம்மதமின்றி உடலுறவு கொண்டால் கிரிமினல் குற்றம் என்று கூறுகிறது இப்பிரிவு. ஒரு பெண் -கணவனின் ஏகபோக உடைமையல்ல. பெண்ணுக்கான பாலுறவு சுதந்திரம் கணவனால் மட்டுமே தரப்பட வேண்டும் என்ற இந்த பிரிவை நீக்க வேண்டும் என்று 1971 ஜனவரி 23, 24 தேதிகளில் சேலத்தில் பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். தொலை நோக்கோடு பெரியார் முன்மொழிந்த தீர்மானம் இப்போது உச்சநீதிமன்றத்தால் ஏற்கப்பட்டிருக் கிறது.

மற்றொன்று இந்திய தண்டனைச் சட்டத்தில் இடம் பெற்ற 377 வது பிரிவு செல்லாது என்ற தீர்ப்பாகும். ஒருவரின் பால் உறவு சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று தீர்ப்பு தெளிவு படுத்தியிருக்கிறது. திருமணம் என்பது பெண்ணுக்கும் ஆணுக்கும் நடப்பதுதான் என்ற சமூகம் திரித்த வரையரையை இந்த தீர்ப்பு தகர்த்துள்ளது. இத்தீர்ப்பின் வழியாக ஜாதியமைப்பு நிறுவனமான குடும்பம் என்ற அமைப்பின் இறுக்கம் தளர்வதோடு குழந்தைப் பேறு பெண்ணினத்தை அடிமையாக்குகிறது என்ற பெரியாரிய பெண் விடுதலை சிந்தனைக்கு வலிமை சேர்க்கிறது. காலத்தின் மாற்றத்தைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகள் பெண் விடுதலையை உறுதி செய்யும் தீர்ப்புகளாகும்.

பெண்கள் உரிமைக்கும் விடுதலைக்கும் ஆண்களின் அதிகார மனோபாவம் ஒரு காரணமாக இருந்தாலும் அந்த ஆதிக்கத்துக்கான கருத்தியலை வழங்குவது மதங்களேயாகும். மதங்கள் பக்தி, சடங்கு, வழிபாடுகள் வழியாக பெண்கள் மீது திணிக்கும் அடிமைப் பண்பாட்டை எதிர்க்காமல் ஆண் ஆதிக்க எதிர்ப்பு மட்டுமே முழுமையான பெண்ணுரிமையை வழங்கிடாது என்று இந்த செயலவை சுட்டிக் காட்ட விரும்புகிறது



### ஏழு தமிழர் விடுதலை

தமிழ்நாடு அமைச்சரவை உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதித்து ஏழு தமிழர் விடுதலைக்கு பரிந்துரைத்த பிறகும் தமிழக ஆளுநர் அதற்கு ஒப்புதல் வழங்காமல் காலம் கடத்துவது ஆளுநரின் சட்டரீதியான கடமையை மீறுவதாகும். நளினியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக கலைஞர் தலைமையிலான அமைச்சரவை பரிந்துரைத்தபோது அன்றைய ஆளுநர் பாத்திமா பீவி அவருக்கு தனிப்பட்ட முறையில் உடன்பாடு இல்லையென்றாலும் சட்டரீதியாக ஏற்பு வழங்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். 7 தமிழர் விடுதலையில் முடிவெடுக்கும் அதிகாரம் நடுவண் அரசுக்கே உண்டு என்று உச்சநீதிமன்றம் அளித்த அதே தீர்ப்பில் அரசியல் சட்டம் 161 வது பிரிவு மாநில அரசுக்கு வழங்கியுள்ள தண்டனைக் குறைப்பு அதிகாரம் அப்படியே நீடிக்கும், அதில் கை வைக்க முடியாது என்றும் தெளிவுபடுத்தியிருந்தது. இப்போது 7 பேர் விடுதலையில் முன்னிற்கும் பிரச்சனை சிறைவாசிகளாக இருந்த காலத்தில் அவர்களின் நன்னடத்தையும் அதுகுறித்து இந்த சிறை சீர்திருத்த குழு வழங்கியுள்ள பரிந்துரைகளை தவிர அவர்கள் கடந்த காலத்தில் செய்த குற்றங்களின் தன்மைகளை பொறுத்து அல்ல. அதுமட்டுமின்றி இந்த 7 பேரும் ஏற்கனவே தண்டனை குறைப்பிற்கு உள்ளானவர்கள் என்ற நிலையில் சிறைச்சாலை விதிகளின் 341 வது விதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடுகிறார்கள். இவர்களை முன்கூட்டியே விடுதலை செய்யும் உரிமை இந்த விதி சிறைத்துறை கண்காணிப்பாளருக்கே வழங்குகிறது. ஆக அரசியல் சட்டமும் சிறை விதிகளும் வழங்கியுள்ள இந்த உரிமைகளையும் விதிகளையும் பயன்படுத்தி இந்த 7 தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அதற்கான அழுத்தங்களை தமிழக அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் நடத்த முன்வரவேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்திகிறது.

### அறநிலையத்துறை

கோயில் சொத்துக்கள் கொள்ளை போகாமல் அவற்றை ஒழுங்குபடுத்திட இந்தியாவிலேயே நீதிகட்சி ஆட்சி காலத்தில்தான் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோது இந்து அறநிலையத்துறை சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போது அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் கடவுள்கள் திருட்டுப் போகும் புகார்கள் ஏராளம் வந்துகொண்டிருக்கின்றன. இந்த திருட்டுகளும் மோசடிகளும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அரசு கட்டுப்பாட்டில் இருந்து கோயில்களை விடுவித்து தனிநபர் வாரியத்தின் கீழ் கொண்டுசெல்லும் முயற்சிகள் வன்மையானக் கண்டனத்துக்கு உரியதாகும். இப்போதும் அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படாத தில்லை நடராஜன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் நடக்கும் ஊழல்களை நாடறியும். அதே நேரத்தில் அறநிலையத்துறையின் கீழுள்ள தமிழ்நாட்டில் அதிக வருமானமுள்ள மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகம் அதன் சிறந்த நிர்வாகத்தினால் இப்போது 176 கோடி ரூபாய் வைப்பு நிதியாக வங்கியில் வைத்திருக்கும் செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன.

எனவே கோயில்களை அறநிலையத்துறையில் இருந்து விடுவிக்கும் பார்ப்பன சதிவலையில் சிக்கிவிடக் கூடாதென்று இந்த செயலவை தமிழக அரசையும் இனஉணர்வுள்ள இறைஉணர்வாளர்களையும் கேட்டுக்கொள்கிறது.

### ஹைட்ரோ கார்பன் திட்டம்

மீத்தேன் ஹைட்ரோ கார்பன் போன்ற தமிழகத்தின் விவசாய நிலங்களை நஞ்சாக்கும் ஆபத்தான திட்டங்களை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் போராடி வரும் நிலையில் மேலும் மூன்று புதிய ஹைட்ரோ கார்பன் எடுக்கும் திட்டத்திற்கு தமிழக நடுவண்அரசு அனுமதித்திருப்பதையும் திட்டங்கள் குறித்து மக்கள் கருத்துக் கேட்பை

(4ஆம் பக்கம்)



### சங்கர் மரணத்துக்கு செயலவை இரங்கல்

900 மாணவர்களை அகில இந்திய தேர்வில் வெற்றி பெற வைத்து சாதனை படைத்தவரும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு அகில இந்திய தேர்வுப் போட்டிகளுக்கு பயிற்சி அளித்தவரும் சமூக நீதி உணர்வோடு சமூக நீதிக்கான திறவுகோலாக தனது சங்கர் அய்.ஏ.எஸ். அகாடமியை உருவாக்கிக் கட்டி வளர்த்தவருமான சங்கர், தனது இளம் வயதில் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருப்பது பெரும் துயரத்தைத் தருகிறது. அவரது மறைவுக்கு இந்த செயலவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றிய திருப்பூரில் கூடிய கழக செயலவை, 2 நிமிடம் மவுனம் காத்து மரியாதை செலுத்தியது.

## பார்ப்பனிய பா.ஜ.க. நடத்தும் ‘புஷ்கரம்’

வேதகால பார்ப்பன ஒடுக்குமுறை கலாச்சாரத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்க பார்ப்பனர்கள் தீவிரமாகக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். அந்த முயற்சிகளில் ஒன்றுதான் தாமிரபரணி மகா புஷ்கரம். ஏற்கனவே கொலை வழக்கில் கைதாகி, பிறகு விடுதலையான இறந்துபோன காஞ்சிபுரம் ஜெயேந்திரன், காவிரி புஷ்கரத்தை நடத்தினார். இப்போது தமிழ்நாட்டில் உற்பத்தியாகி தமிழ்நாட்டுக்குள்ளே கடலில் கலக்கும் ஒரே நதியான தமிழர் பண்பாட்டோடு இணைந்து நிற்கும் தாமிர பரணிக்கு வேத முலாம் பூசி புஷ்கரம் நடத்துகிறார்கள்.

அது என்ன புஷ்கரம்? குருபகவான் ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசியான விருச்சிக இராசிக்கு ‘வீடு’ மாற்றுகிறானாம். முன்பணம் வாடகை இல்லாமல் வீடுகளை மாற்றிக் கொள்ளும் உரிமை இந்த இராசி பகவான்களுக்கு மட்டுமே உண்டு. தாமிரபரணி விருச்சிகராசிக்கான நதியாம். 144 ஆண்டுகளுக்குப் பிறது இந்த விழா கொண்டாடப்படுவதால் இது மகாபுஷ்கரமாம். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது புஷ்கரமாம். இந்த ‘மகா புஷ்கரத்’துக்கு தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறை ஏற்பு வழங்கவில்லை. ‘கர்ப்பகிரகத்துக்குள் இருக்கும் பகவானை’ ஆற்றங்கரைக்கு அழைக்க வேதசடங்குகள் நடத்துவது ‘ஆகமவிதி’களுக்கு எதிரானது என்று அறநிலையத் துறை கூறுகிறது. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதை ஆகம விதிகள் ஒருபோதும் அனுமதிக்காது என்று அலறி உச்சநீதிமன்றம் வரைச் சென்று வழக்காடும் பார்ப்பனர்கள், தாமிரபரணி மகாபுஷ்கரம் ஆகமத்துக்கு எதிரானது என்றால் அதைக் கொண்டாடியே தீரவேண்டும் என்கிறார்கள்.

‘இராசிபலன்’ குரு பெயர்ச்சிகளின் அடிப்படையில் மனிதர்களின் ‘எதிர்காலத்தை ‘, ‘கடந்தகால பாவங்களை’த் தீர்ப்பதற்கான ‘பரிகாரங்கள், தோஷக் கழிப்பு’களைக் கூறிவந்த கூட்டம் இப்போது நதியையும் விட்டு வைக்கவில்லை. தாமிரபரணிக்கு ‘விருச்சிக இராசி’ என்று எந்த சோதிடன் குறித்து வைத்துள்ளான்? நதிகளுக்கான ‘இராசி’, விலங்குகளுக்கும் உண்டா? தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்நாட்டிலேயே கடலில் கலக்கும் நதிக்கு எப்படி வடமொழிப் பெயர் சூட்டி, ‘புஷ்கரம்’ கொண்டாடுகிறார்கள்?

நதியின் தூய்மையைக் கெடுப்பதே இந்த சடங்குகள்தான் என்பதை மறுக்க முடியுமா? நதியில் மூழ்கி உடுத்திய ஆடையை அப்படியே நதிக்குள் போடும் சடங்குகளால் தாமிரபரணி நதி நீர் எவ்வளவு பாழாகியது என்பதை இவர்கள் யோசித்தார்களா? கடலுக்குள் விநாயகன் சிலைகளைக் கரைப்பதும் செத்த பிணங்களை பாதி எரியூட்டப்பட்ட நிலையிலேயே கங்கையில் தள்ளி விட்டால் ‘மோட்சம்’ என்பதும் மதத்தின் அடிப்படையில் நதிநீரின் தூய்மையையும் சுற்றுச் சூழலையும் பாழாக்குவது அல்லவா?

இந்த மகாபுஷ்கரம் இப்போது அரசியலாக்கப்படுகிறது என்பதையும் குறிப்பிட வேண்டும். பாரதிய ஜனதாவும் விசுவ இந்து பரிஷத்தும் இதற்கு விழிப்புணர்வு யாத்திரைப் பயணம் நடத்துகிறது. பா.ஜ.க.வின் இல. கணேசனும் தமிழிசையும், காஞ்சிபுரம் மடத்தின் புதிய பார்ப்பன சங்கராச்சாரி விஜயேந்திரன் ஆசியுடன் தொடங்கி வைக்கிறார்கள். புஷ்கரத்துக்கு எதற்கு விழிப்புணர்வுப் பயணம்? அதுவும் விசுவஇந்து பரிஷத் கொடிகளை மோட்டர் சைக்கிளில் கட்டிக் கொண்டு ரத ஊர்வலம் நடத்துகிறார்களாம். மதத்தின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் நடத்துகிறார்கள். ‘புஷ்கரம்’ இரதயாத்திரைத் தொடக்க விழாவுக்கு வந்த இல கணேசன், தமிழ்நாட்டு அரசியல் இடைத்தேர்தல் தள்ளி வைப்புக் குறித்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளிக்கிறார். அறநிலையத் துறை பங்கேற்காத இந்த நிகழ்வில் தமிழக ஆளுநர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார். தமிழகத்தில் காலூன்ற பா.ஜ.க. ‘புஷ்கரங்களை’க் கையில் எடுத்து, அதன் உண்மையான பார்ப்பன முகத்தை வெளிகாட்டியிருக்கிறது.

# கல்விக்கண் திறந்தது ‘சரசுவதி’யா? ‘காமராசரா’?

இந்து பார்ப்பன பண்டிகைகளின் உள்ளடக்கங்கள் மாற்றத்துக்குள்ளாகி வருகின்றன. உள்ளடக்கங்கள் மாறினாலும் ‘இந்து’ மத நீரோட்டத்துக்குள்ளேயே மக்களை நிறுத்தி வைக்கத் துடிக்கும் பார்ப்பனியம் இந்தப் பண்டிகைகள் சமூகத்தில் தொடர்ந்து கொண்டாடப்பட வேண்டும் என்றே விரும்புகிறது.

அனைத்து மதத்தினருக்கும் பொதுவான, மதங்களுக்கு அப்பாற்பட்ட அரசு அலுவலகங்களில் காவல் நிலையங்களில் ‘ஆயுத பூஜை’ கொண்டாட்டங்கள் நடக்கின்றன. இப்படி அரசு அலுவலகங்களை ‘பஜனை மடங்’களாக மாற்றக் கூடாது என்று அரசு ஆணைகளும் நீதிமன்றத் தீர்ப்புகளும் இருப்பதை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சுட்டிக்காட்டி அவற்றை நகல் எடுத்து அனுப்பி வைத்து தொடர்ந்து போராட்டங்களை இயக்கங்களை நடத்தி வருகிறார்கள்.

மதம் சார்ந்த நம்பிக்கைகளோடு மக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் ஓர் உளவியல் அடங்கியிருக்கிறது. பொருளாதார நெருக்கடிகளைப் பற்றி கவலைப்படாமல் எந்த எல்லை வரையும் சென்று வீண் விரயங்களில் பணத்தை செலவிடும் ‘உளவியலை’ மதம் சார்ந்த பண்டிகைகள் உருவாக்கி விடுகின்றன.

பண்டிகைக் கொண்டாடும் நம்பிக்கையாளர்களில் 60 சதவீதம் பேர் வாங்குவதற்கு திட்டமிட்டுள்ள பொருள்களுக்கான பட்டியலை தயாரித்து வைத்துள்ளனர் என்றும், கடைகளில் வரிசையில் நிற்பதை விட ‘ஆன்லைன்’ வழியாக வாங்குவதற்கே முன்னுரை தர விரும்புவதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. வணிக நிறுவனங்கள் ‘தள்ளுபடி’ அறிவிப்புகளை இப்போதே அறிவிக்கத் தொடங்கிவிட்டன.

இந்து பார்ப்பனியப் பண்டிகைகள் மத சடங்குகளுடன் வணிகப் பண்பாடுகளை இணைத்துக் கொள்கின்றன. ‘புனிதமான மதத்தில் வர்த்தகத்தைப் புகுத்தாதே’ என்று இந்து மதத்தைக் காப்பதற்கு அமைப்புகள் நடத்தும் எந்த ‘முன்னணி’யும் ஏன் கண்டிக்கவில்லை? காரணம் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த கோரிக்கையை முன் வைத்தால் மக்களே இந்த அமைப்புகளை புறந்தள்ளி தனிமைப்படுத்தி விடுவார்கள். மதப் பண்டிகைகள் வழக்கத்தால் ‘செக்கு சுற்றும்’ நிகழ்வுகளாக மாறி, ‘புனிதப் பெருமை’ நீர்த்துப் போய்விட்டது என்பதே உண்மை.

பண்டிகைக்காக வாங்கும் கணிப்பொறியில் சரசுவதி கதையை காட்சிகளாக சித்தரிக்க முடியாது. அது ‘ஆபாச வீடியோ’வாக கருதப்பட்டு, ‘சைபர் கிரைம்’ பிரிவு கைது செய்து விடும்! (சரசுவதியின் அந்த கதையை விளக்கும் பெரியார் கட்டுரையை வேறு பக்கத்தில் வெளியிட்டிருக் கிறோம்)

கல்வியை வணிகமாக்கி மக்களை ‘சுரண்டி கொழுக்கும்’ ‘கல்வி தந்தைகளும்’ சரசுவதிக்கு பூஜை போடுகிற கூத்துகளும் ‘இப்படி கொள்ளையடிக்கிறார்களே’ என்று கொதிக்கும் பெற்றோர்களும் ‘சரசுவதி’க்கு பூஜை போடுவதையும் நாடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. என்னே விசித்திர முரண்!

‘சரசுவதி’யை உண்மையான கடவுள் என்றும், அவர் ‘கல்விக் கண்ணை’த் திறந்து விட்டவர் என்றும் உண்மை யிலேயே இவர்கள் நம்பவில்லை என்பதைத்தான் இவை உணர்த்துகின்றன!

‘பார்ப்பனியத்தை நிலைநாட்டும் இந்தப் பண்டிகை களைக் கொண்டாடாதீர்கள்’ என்று பெரியார் மக்களை சந்தித்துப் பேசினார்; எழுதினார்.

அதற்காக ‘இந்து மத விரோதி’ என்று பார்ப்பனர்களும் பார்ப்பனிய அடிமைகளும் கூக்குரலிட்டனர்.

தமிழ்நாட்டில் பல இலட்சம் ‘சரசுவதிகள்’ பெண்களுக்கான பெயர்களில் மட்டும் இருந்தார்கள். ஆனால், ‘அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?’ என்று “சரசுவதி”களையே தற்குறிகளாக வைத்திருந்த நாடு இது. நீண்ட போராட்டங்களுக்குப் பிறகே ‘பெண்கள்’, ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களுக்கான கல்விக் கதவு திறந்தது.

இதைத் திறந்தது சரசுவதிக்காக நடந்த பூஜைகள் அல்ல; சரசுவதியை கொண்டாடச் சொன்ன பார்ப்பனர்களும் அல்ல; அந்த நம்பிக்கைகளுக்கு எதிராக நடந்த போராட்டங்களும் சமூக நீதிக் களங்களும் தான்! இந்த வரலாற்றைப் புரிந்த மான உணர்வாளர்கள் ‘சரசுவதி’யை கொண்டாட மாட்டார்கள்.

சரசுவதிக்கு விழா கொண்டாடுகிறவர்கள், உண்மையாகவே கல்விக் கண் திறந்த காமராசருக்கு விழா நடத்தலாமே!

அந்த விழாவில் ஒருவருக்கொருவர் அறிவார்ந்த நூல்களை பரிசுகளாக வழங்கலாமே!

கல்விக்கு செலவிட இயலாத ஏழை – ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வரலாமே!

சிந்தியுங்கள்!

## 144 ஆண்டுகளுக்கு முன்பு புஷ்கரம் நடந்தது என்பது உண்மையா?

144 ஆண்டுக்குப் பின்னால் தாமிரபரணி புஷ்கரம் நடப்பதாகச் செய்திகளில் சொல்கிறார்கள். ஆனால் அப்படி ஒரு நிகழ்வே அப்போது நடந்ததாக விபரம் இல்லை என்கிறது நீதிமன்றத்தில் அரசு தரப்பு. வற்றாத தாமிரபரணி நதி இதுவரை இரண்டு முறை பொதிகை முதல் புன்னக்காயல் வரை வற்றியிருக்கிறது. அது முற்றிலுமாக வற்றிய வருடம் 144 ஆண்டுகளுக்கு முன்பு தான்.

இந்தியாவையே புரட்டிப்போட்டப் பஞ்சம் ஏற்பட்ட 1876 தான். 1872 ல் தாமிரபரணி முற்றிலுமாக வற்றி மீண்டும் அது இயல்புக்கு வந்தது 1892 ல் தான். அதன் பிறகு மீண்டும் 1885 மற்றும் 1889 இல் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. 1872 பஞ்சத்தை ஒட்டித் தான் தென் மாவட்டத்தினர் பஞ்சம் பிழைக்க மாட்டுவண்டிகள் கட்டிக்கொண்டு மும்பை போய்ச் சேர்ந்தனர். அவர்கள் போய் தங்கிய இடம் தான் இன்றைய தாராவி. 1872 முதல் 1890 வரை பஞ்சத்தால் லட்சக்கணக்கான மக்கள் நாடு முழுமையும் கொத்துக்கொத்தாக செத்து மடிந்தனர். 144 வருடங்களுக்கு முன்னால் தண்ணீரே ஓடாத தாமிரபரணியில் புஷ்கர விழா எப்படி நடத்தப்பட்டது?

மேலும் இந்த குறிப்பிட்ட ஆண்டுகளில் தமிழகத்தில் பெரும் ஆலய நுழைவுப் போராட்டங்களை நாடார்கள் நடத்திய வருடங்களும் கூட. 1872 ல் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்குள்ளும், 1874 ல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள்ளும், 1876 ல் திருத்தங்கல் கோவிலிலும், 1897 ல் கமுதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலிலும், 1899 ல் சிவகாசி காசி விஸ்வநாதர் கோவிலிலும் ஆலயப் பிரவேசப் பெரும் போராட்டங்களை நாடார்கள் நடத்தினர்.

நாடார்கள் ஆலயம் நுழைவதால்தான் பெரும் பஞ்சங்கள் ஏற்படுகிறது என சனாதனவாதிகள் பிரச்சாரம் செய்த காலமும் இதுதான். இதையொட்டியே வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள 1899 சிவகாசி கலவரம் நடந்தது. இந்தக் கலவரத்தையொட்டி அங்கிருந்து வெளியேறிய நாடார்கள் தாங்கள் புதிதாகச் சென்று குடியேறிய ஊர்களில் சிவகாசி நாடார் உறவின்முறை என்று பெயர் வைத்திருப்பார்கள். பார்ப்பனிய அடக்குதலுக்கு எதிராகப் போராடியது சமூகம் நாடார் சமூகம்.

‘தாமிரபரணியை காவிகளிடமிருந்து காப்போம்!’

## திருச்செங்கோடு கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேச்சு (2)

# இந்தி எதிர்ப்பில் தமிழகம் உருவாக்கிய தாக்கம்

*1976ஆம் ஆண்டு அவசர நிலை காலத்தில் கூட இந்தித் திணிப்பில் தமிழ்நாட்டை மட்டும் விலக்கி வைத்து ஆட்சி மொழி விதிகளை உருவாக்கியதை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுட்டிக் காட்டினார்.*

***“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***

இந்தியாவைப் பற்றி பல ஆய்வாளர்கள் எழுதியிருக்கிறார்கள். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்த்தியா சென் ஒரு நூலை எழுதினார். அவர் ஒரு வங்க நாட்டுக்காரரர். அவரோடு இணைந்து அந்த நூலை எழுதியவர் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ழின் தெரசு. அந்த நூலில் இந்தியாவில் வளர்ந்த மாநிலங்களாக தமிழ்நாடு, கேரளா மற்றும் இமாசலப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களைத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக தமிழ்நாடும், கேரளாவும் இந்தியாவோடு இல்லாமல் இருந்திருந்தால் ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக வளர்ந்திருக்கும் என்று சொன்னார்கள். 1970ஆம் ஆண்டு வரையில் வறுமையில் இருந்த தமிழ்நாட்டை ஒரு மிகச் சிறந்த அரசியல் மாநிலமாக மாற்றியிருக்கிற பெருமை திராவிட அரசியல் கட்சிகளுக்கு உண்டு என்றும் சொல்கிறார்கள்.

இங்கு ஒரு கூட்டம் திராவிட அரசியல் பற்றி இழிவாகப் பேசுகிறது. ஆனால் அவர்களே திராவிட அரசியலில் மேற்கொண்ட ஒவ்வொரு திட்டங்களையும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எப்படி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று மிக மகிழ்ச்சியோடு அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஜெயலலிதா மீதிருக்கிற ஆயிரம் விமர்சனங்களைத் தாண்டியும் கூட, அவருடைய மக்கள் நலத் திட்டங்கள் திராவிட அரசியலின் தொடர்ச்சி, திராவிட இயக்கத்தின் தொடர்ச்சி என்று அவர்கள் எழுதுகிறார்கள். இந்த நாட்டில் செயல்பட்ட சுயமரியாதை இயக்கம் - அது விளைவித்த சிந்தனைப்போக்கு - அதன் தொடர்ச்சியாய் அமைந்த திராவிட இயக்க அரசியல் இவற்றையெல்லாம் பற்றி எங்கோ இருக்கிற வங்காளத்துக்காரர் பேசுகிறார், பெல்ஜியம் நாட்டுக்காரரர் பேசுகிறார். ஆனால் நாம்தான் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறோம் என்பதையெல்லாம் இந்த வேளையில் நாம் எண்ணிப்பார்க்கிறோம்.

வரலாற்றுக் காலத்திருந்து ஆரியர்களுக்கு மட்டுமே கல்வி, நமக்கெல்லாம் இல்லையே என்ற நிலையை மாற்றியிருக்கிறார்கள். நீதிக் கட்சி இருந்த கொஞ்ச காலத்தில் பள்ளிகளை தொடங்கினார்கள். கல்வித் துறையை தொடங்கினார்கள். பல்கலைக்கழகங்கள் வந்திருக்கின்றன. ஆனாலும் அடித்தட்டு மக்களுக்கான கல்வி அவர்களை முழுமையாக அப்போது சென்றடையவில்லை. தொடக்கக் கல்வி பயில காமராஜர் ஆட்சி பெரிதும் உதவியது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. நீதிக்கட்சி காலத்துக்கு முன்பு எல்லா இடங்களையும் பார்ப்பனர்களே கைப்பற்றி வைத்திருந்தார்கள். அவர்கள் கற்றிருந்த கல்வியின் காரணமாக வேலைவாய்ப்புகளையும், ஆட்சிப் பொறுப்பில் அதிகாரிகளாகவும் பார்ப்பனர்களே அமர்ந்திருந்த போக்கு நிலவியது. அதில் தப்பித்தவறி ஒரு தமிழன் அல்லது பார்ப்பனர் அல்லாதவர் நுழைந்துவிட்டாலும் அவனை வெளியேற்ற செய்கிற வஞ்சனை என இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுதான் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்டது.

பின்னர் அது தென்னிந்திய நல உரிமைச்



**சாலையில் தார் ஊற்றுகிற ஒரு தொழிலாளி சாக்கைக் கட்டிக் கொண்டு அவதிப்படுகிறான் என்பது ஒரு முதலமைச்சர் கண்ணில் படுவதென்பது அதிசயம். அது கலைஞர் கண்ணில் பட்டது.**

சங்கம் என்றானது. அதற்குப்பிறகு அந்த இயக்கம் நடத்திய ஜஸ்டிஸ் பத்திரிகையால் நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. அந்த நீதிக்கட்சியின் ஆட்சியில்தான் கல்வி உரிமைகள் பற்றி பேசினார்கள். அவர்கள்தான் பெண்களின் உரிமை குறித்தும் பேசினார்கள். 1920ஆம் ஆண்டு தேர்தலில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த அடுத்த ஆண்டே பெண்களுக்கும் வாக்குரிமை உண்டு என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதைப் பார்த்துதான் மற்ற மாநிலங்களிலும் பெண்களுக்கு வாக்குரிமை கொண்டு வந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலமான அப்போது இங்கிலாந்திலேயே பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. நம்மை ஆட்சி செய்த ஆங்கிலேய நாட்டில் பெண்களுக்கு இல்லாத உரிமையை, திராவிட இயக்கத்தின் தொடக்கக் கட்சியான நீதிக் கட்சிதான் வழங்கியது. கலைஞர் ஆட்சிக் காலத்தில் கலைஞர் கொண்டு வந்த பெண்கள் நலத் திட்டங்கள் எல்லாம் அதன் தொடர்ச்சிதான்.

திராவிட அரசியலின் தொடர்ச்சியாக அதனுடைய உச்ச நிலைக்குப் போய் கலைஞர் பணியாற்றியதைத்தான் இப்போது நாம்

**கலைஞருடைய இறுதி ஊர்வலத்தில் ஒன்றைப் பார்த்தோம். வடக்கே இருந்து பார்த்தவர்களும், உளவுத் துறையும் அதிர்ச்சியடையும் வண்ணம் அந்த இறுதி ஊர்வலத்தில் பங்கெடுத்தவர்கள் பெரும்பாலானோர்கள் இளைஞர்களாக இருந்தனர்.**

பார்த்துக்கொண்டிருக்கிறோம். கலைஞர் ஆட்சியின் சாதனைகள் என்று சொல்லுகிற போது ஒரு அரசியல்வாதியாக இருந்து செய்த சாதனைகள் ஒருபக்கம், எப்போதும் அவர் பார்க்கிற பார்வை ஒருபக்கம் என இரண்டையும் கவனிக்க வேண்டியுள்ளது. சாலையில் தார் ஊற்றுகிற ஒரு தொழிலாளி சாக்கைக் கட்டிக்கொண்டு அவதிப்படுகிறான் என்பது ஒரு முதலமைச்சர் கண்ணில் படுவதென்பது அதிசயம். அது கலைஞர் கண்ணில் பட்டது. உடனே அவர்கள் எல்லோருக்கும் ஜேக்பூட் (கால்களுக்கான உறை) கொடுங்கள்’ என்று உத்தரவிட்டார். ‘கைகளுக்கு அணிய கையுறை கொடுங்கள்’ என்றார். அவன் வெய்யிலில் வீதியில் நின்று கொண்டிருப்பதுவே அவலம். அப்படிப்பட்ட நிலையில் வெறுங்காலில் நிற்பதையும், வெறுங் கையில் வேலை செய்வதையும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று சிந்திக்கிற பார்வை கொண்டவர்களாகத்தான் திராவிட இயக்கத்தின் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள்.

நீதிக் கட்சியில் இருந்த தலைவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்களாக, ஜமீன்தார்களாக, அரசர்களாக இருந்தவர்கள். அவர்களுக்கும் இந்த பார்வைதான் இருந்தது. நீதிக்கட்சி ஒருகட்டத்தில் சூழ்ச்சியால் அழிக்கப்பட்டது. அதைப்பற்றி விளக்க வேண்டியத் தேவை இப்போது இல்லை.

நாம் ஏற்கெனவே இந்தித் திணிப்பைப் பற்றி பார்த்தோம். இந்தித் திணிப்பை எதிர்த்து 1930களில் இருந்து போராடுகிறோம். இந்தித் திணிப்பு ஆணை வந்தது 1937ஆம் ஆண்டில்தான். ஆனால் காங்கிரசிலிருந்து வெளியே வந்த பெரியார் 1926ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே ‘இந்தியின் இரகசியமும், தமிழர்க்கு துரோகமும்’ என்ற தலைப்பில் ‘இந்தித் திணிப்புக்கு எதிராகக் குடிஅரசில் கட்டுரை எழுதினார். தொடக்கத்தில் இருந்தே இதைக் கவனித்து வந்த பெரியார் மிகக் கவனமாக அப்போதிருந்தே எழுதினார். இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் மெல்ல மெல்ல அதிகரித்து மாணவர் போராட்டமாகி, மக்கள் போராட்டமாக வெடித்தது.

1967ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்த பின்னால் இவர்களை எப்படியாவது ஒழிக்க வேண்டுமென்று கருதிய இந்திரா காந்தி 1976ஆம் ஆண்டு பல்வேறு காரணங்களைச் சொல்லி ஆட்சியைக் கலைக்கிறார். 1963ஆம் ஆண்டிலேயே ஆட்சிமொழி சட்டத்தை எழுதிவிட்டார்கள். அதில் இந்திதான் ஆட்சி மொழி என்று கூறப்பட்டது. ஆனால் அதிலும் சில விலக்குகள் வைத்தார்கள். இதன்படி மாநிலங்களை ஏ, பி, சி என்று பிரித்தார்கள். சி பிரிவில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் மற்றும் வங்காளம் இருந்தது. சி பிரிவு மாநிலங்களுக்கு வருகிற அரசு ஆணைகள் மட்டும் ஆங்கிலத்தில் இருக்கும். தேவைப்பட்டால் இந்தி மொழி பெயர்ப்பு இருக்கும்.

ஆனால் இந்த சட்டத்துக்கான விதிகள் நீண்டகாலம் எழுதப்படாமல்தான் இருந்தது. 1976ஆம் ஆண்டில்தான் அதற்கான விதிகளை எழுதினார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள் பலரும் சிறையில் இருந்தார்கள். ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. திராவிடர் கழகத்தின் தலைவர்களும் சிறையில் இருந்தார்கள். மத்திய ஆட்சிக்கு எதிராக இருந்த அனைவரும் சிறையில் இருந்தார்கள். ஆனால் விதி எழுதப்பட்ட போது விதி எண் ஒன்றில் உட்பிரிவு 1 சட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டது. உட்பிரிவு 2இல் இந்த சட்டம் இந்தியா முழுவதும், தமிழ் நாட்டைத் தவிர மற்ற எங்கும் செல்லுபடியாகும் என்று குறிப்பிட்டது. ஆட்சி கலைக்கப்பட்டு, தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்தபோது கூட தமிழகத்தைப் பற்றிய அச்சம் மத்திய அரசின் மனதில் இருந்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் கலைஞர் மட்டும்தான் வெளியில் இருந்தார். திராவிடர் கழகத்தில் மணியம்மையார் மட்டும்தான் வெளியில் இருந்தார்.

அப்படியானால் இந்தி எதிர்ப்புக்கு எதிராக எவ்வளவு பெரிய தாக்கத்தை தமிழ்நாடு ஏற்படுத்தியிருக்கும் என்பதை சிந்திப்பதற்காக இதைச் சொல்லுகிறேன். நாம் அறியாத பல பெருமைகள் எல்லாம் நமக்கு இருக்கிறது. ஆனால் அன்றாட நிகழ்வுகளின் பின்னால் நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம். இவற்றை அறிந்துகொள்ள நாமாக வாய்ப்பை ஏற்படுத்தித்தான் பேச வேண்டியுள்ளது.

கலைஞருடைய இறுதி ஊர்வலத்தில் ஒன்றைப் பார்த்தோம். வடக்கே இருந்து பார்த்தவர்களும், உளவுத் துறையும் அதிர்ச்சியடையும் வண்ணம் அந்த இறுதி ஊர்வலத்தில் பங்கெடுத்தவர்கள் பெரும்பாலானோர்கள் இளைஞர்களாக இருந்தனர். திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று கருதிக் கொண்டிருந்தவர்களின் கண்ணுக்கு அச்சத்தை ஊட்டியிருக்கிறது. அதற்குப் பின்னால் சமூக வலைதளங்களில் நடந்த விவாதங்கள் இன்னும் திராவிட இயக்க சிந்தனை அடிமட்டத்திலிருந்து வந்து கொண்டே இருக்கிறது என்பதைத்தான் காட்டியது.

அதற்கு அடுத்ததாக இப்போது நடக்கிற கூட்டங்களும் ஒரு உதாரணமாகும். எந்த அமைப்பையும் சாராத இளைஞர்கள், திராவிட வேர்கள் என்கிறார்கள், திராவிட

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூர் கழகச் செயலவையில்...

- திருப்பூர் செயலவையில் பங்கேற்ற தோழர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கருத்துகளை முன் வைத்தனர்.
- செயலவைக் கூட்டங்களில் கழகத் தலைவருக்கு வணக்கம் கூறுவதற்கு பதிலாக நன்கொடை வழங்கி உரையைத் தொடர வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்து, மடத்துக்குளம் மோகன் தலைவருக்கு ரூ.500/- வழங்கி உரையைத் தொடர்ந்தார். தோழர்கள் ஆர்வமாக வரவேற்றனர். சிலர் அதேபோல் ரூ.100, ரூ.200 என்று தலைவரிடம் வணக்கம் கூறி நன்கொடை வழங்கினர்.
- மதிய உணவாக சுவையான மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது.
- சாக்கோட்டை இளங்கோவன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களைப் பாடி தோழர்களை மகிழ்வித்தார்.
- தலைமைக்குழு மற்றும் செயலவைக் கூட்டங்களுக்கு திருப்பூர் மாவட்டக் கழகம் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தது.
- கழகக் கட்டமைப்பு நிதி - கழக ஏடுகளுக்கு சந்தா சேர்ப்பில் மாவட்டங்களின் பங்களிப்பைத் தோழர்கள் அறிவித்தனர்.
- நிமிர்வோம் இதழுக்கு மாதம் 1000 நன்கொடை தருவதாக அறிவித்த ஆசிரியர் சிவகாமி, முதல் தவணையாக ரூ.5,000 வழங்கினார். சென்னை அன்பு தனசேகர் மாதம் ரூ.1000 வழங்குவதாக அறிவித்தார்.

## கழக செயலவையில் உரையாற்றிய தோழர்கள்

தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), சிவக்குமார் (தமிழ்நாடு மாணவர் கழகம்), வீ. சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அய்யனார் ( தலைமைக் கழக உறுப்பினர்), விஜயகுமார் (இணையதளப் பொறுப்பாளர்), பரிமளராசன் (முகநூல் பொறுப்பாளர்), மடத்துக்குளம் மோகன், ஈஸ்வரன் (காவலாண்டியூர்), உமாபதி (சென்னை), சூலூர் பன்னீர்செல்வம்.

பிற்பகல் அமர்வு : அன்பு தனசேகர் (சென்னை), செந்தில் (FDL), வேழவேந்தன் (சென்னை), இராமர் (விழுப்புரம்), அகிலன் (திருப்பூர்), தினேஷ் (காஞ்சிபுரம்), சூரியகுமார் (சேலம் மேற்கு), நாமக்கல் - சாமிநாதன், முத்துப்பாண்டி, நேருதாஸ் (கோவை), இராமச்சந்திரன் (கோவை), சங்கீதா (திருப்பூர்), நாத்திகஜோதி (ஈரோடு வடக்கு), செல்லப்பன் (ஈரோடு தெற்கு), மாப்பிள்ளைச்சாமி (மதுரை), செந்தில் (விருதுநகர்), பால்வண்ணன் (திருநெல்வேலி), ரவிசங்கர் (தூத்துக்குடி), முத்து (சிவகங்கை), ஆரோக்கியசாமி (திருச்சி), கோபால் இராமகிருஷ்ணன் (அரியலூர்), பாரதிதாசன் (கடலூர்), சாக்கோட்டை இளங்கோவன் (தஞ்சை), மகேஷ் (நாகை), முகில்ராசு (திருப்பூர்), வெள்ளியங்கிரி (பொள்ளாச்சி), நிர்மல் (கோவை), இராம.இளங்கோவன் (வெளியீட்டுப் பிரிவு செயலாளர்), துரைசாமி (பொருளாளர்), கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுதுகள் என்கிறார்கள். புதியப் புதிய பெயர்களில் தங்களை இணைத்துக்கொண்டு ஆங்காங்கே கலைஞரின் நினைவுநாளை, நினைவேந்தலை நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். திராவிட அரசியலின் தேவை என்பதைத்தான் இந்த நிகழ்ச்சிகளில் பேசுகிறார்கள்.

திராவிடம் என்று பெயர் வைத்துக் கொள்வது அரசியல் அல்ல. உண்மையான திராவிடத்தை ஏற்றுக்கொண்டவர்கள், அந்த அரசியலின் ஒரு பங்காகத்தான் நாம் இன்று கூடியிருக்கின்றோம். இதில் நம்முடைய பழைய திராவிட அரசியல் என்பதைப் பார்ப்பனர்களை திட்டுவார்கள் என்ற அளவில் மிகச் சாதாரணமாக, மிக எளிமையாகப் புறந்தள்ளுகிறார்கள். நம்மை உதாசீனப்படுத்தி தள்ளுவதற்காக எதிரிகள் இவ்வாறு பேசிக்கொண்டே வந்தார்கள். பார்ப்பனர் என்ற தனிமனிதர் மீது நமக்கு எந்தக் கோபமும் இல்லை. பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டுமென்று விருப்பமா என்று பெரியாரிடம் கூட கேட்டார்கள். “அப்படியெல்லாம் இல்லை. பார்ப்பான் மனிதனாக வேண்டும் என்பதுதான் என் விருப்பம்” என்றார் பெரியார். அவர்கள் மனிதர்களாக இல்லாமல் ஆதிக்கக்காரர்களாக இருக்கிறார்கள். அதுதான் கோபமே தவிர, தனிமனிதன் மீது எங்களுக்கு என்ன கோபம். ஏதேனும் சொல்லி இனத்தூய்மை பார்த்து மக்களைப் பிரிக்கிற பாசிசக் கொள்கை அல்ல எங்கள் கொள்கை. எல்லா மக்களும் ஒன்றுசேர விரும்புகிற நாங்கள், ஒற்றுமைக்கு எதிராக இருக்கிறவர்கள் மீது குறிவைக்கிறோம். ஒட்டுமொத்த மக்களின் நலனைக் கருதாமல் தங்களுடைய மேலாண்மையை நிறுவிக்கொள்ளத்தான் அவர்கள் செயல்படுகிறார்கள்.

சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொள் என்கிறான். இந்தி கட்டாயம் என்கிறான். சுற்றறிக்கையை இந்தியில் எழுத வேண்டும் என்கிறான். இந்தியில் கையெழுத்திட வேண்டுமென்கிறான். எதற்கு அது தேவை? இந்த நாட்டு மக்களோடு செயல்படுகிற எனக்கு என் நாட்டு மொழி தெரிந்தால் போதும். நாம் கருதிக் கொண்டிருப்பதைப் போல உலகம் முழுக்க யாரும் ஆங்கிலம் பேசுவது இல்லை. அவர் மொழியில் பேசினால் மொழிபெயர்ப்பு வருகிறது, கேட்டுக்கொள்கிறார்கள். இந்தியாவில் மட்டும் ஏன் இந்தியிலேயே பேச வேண்டும்? நாங்கள் தமிழில் பேசுகிறோம். வேண்டுமானால் மொழிபெயர்ப்பு ஏற்பாடுகளை செய்து கொள்ளட்டும். ஆனால் அதற்குக் கூட தடையாய் இருந்ததை உடைப்பதற்கு எழுந்ததுதான் திராவிடர் இயக்கம்.

(தொடரும்)

தொகுப்பு: ர.பிரகாசு

# திருப்பூரில் கழகத் தலைமைக் குழு ஆலோசனைக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் அக்.13, 2018 பிற்பகல் 2 மணியளவில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி. இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவசாமி மற்றும் தலைமைக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். களப்பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாம் ஒன்றை 5 நாட்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு அதற்கு ஆகும் செலவை 10 கழகப் பொறுப்பாளர்கள் பகிர்ந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது.

புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் 2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுகளை விடுதலை இராசேந்திரன் அறிவித்தார். கழக ஏடுகளுக்கான சந்தா சேர்ப்புக் குறித்து விவாதிக்கப்பட்டது. மாவட்டம்தோறும் கழகத் தோழர்களை கழகத் தலைவர் பொதுச்செயலாளர் சந்தித்து, கழக அமைப்புகளை புதுப்பிப்பது என்றும் அந்த சந்திப்பின்போதே கழக ஏடுகளுக்கான உறுப்பினர் சேர்ப்பு கணக்குகளை தோழர்கள் முடித்து கழகத்தலைவரிடம் வழங்கிட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

செயலவையில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதோடு தமிழ்நாடு அறிவியல் மன்றம் வழியாக கல்வி நிறுவனங்களில் அறிவியல் நிகழ்ச்சிகள் நடத்துதல், கழக மகளிர் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

# குமாரபாளையத்தில் முப்பெரும் விழா



தந்தை பெரியார் 140ஆவது பிறந்தாள், புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் 138 ஆவது பிறந்தநாள், பெருந்தலைவர் காமராசர் 118 ஆவது பிறந்தநாள் முப்பெரும் விழா பொதுக் கூட்டம், 13.10.2018 ம் தேதி குமாரபாளையம் பேருந்து நிலையத்தில் மாலை 5 மணிக்கு, டி.கே.ஆர். இசைக் குழுவின் பகுத்தறிவுப் பாடல்கள் மற்றும் தலித் மக்களின் உரிமை சார்ந்த பாடல்கள் மூலம் நிகழ்வு தொடங்கியது.

இந்நிகழ்விற்கு, கழகத்தின் நாமக்கல் மாவட்ட தலைவர் மு.சாமிநாதன் தலைமை வகித்தார். மேலும், கேப்டன் அண்ணாதுரை மாவட்ட காப்பாளர், சரவணன் மாவட்ட செயலாளர், வைரவேல் மாவட்ட அமைப்பாளர், முத்துப்பாண்டி மாவட்ட பொருளாளர், மோகன் குமாரபாளையம், ரேணுகா திராவிடமணி குமாரபாளையம் ஆகியோர் முன்னிலை வகிக்க, குமாரபாளையம் இரா.மோகன் வரவேற்புரையாற்றினார். மேலும் நிகழ்வில், காமராசர் உருவப்படத்தை அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி திறந்து வைத்தார், புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் உருவப்படத்தை சாக்கோட்டை இளங்கோவன், தந்தை பெரியார் உருவப்படத்தை திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தனர்.

முதலாவதாக, அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி உரையாற்றினார். அம்பேத்கர் மற்றும் பெரியார், ஜாதி ஒழிப்பு களத்தில் எப்படி ஒரே நேர்கோட்டில் செயல்பட்டனர் என்பதைப் பல வரலாற்று தகவல்களுடன், சாக்கோட்டை இளங்கோவன் உரையாற்றினார். இறுதியாக, அம்பேத்கர், பெரியார், காமராசர் ஆகிய தலைவர்களின் இன்றைய தேவை, அம்பேத்கர், பெரியார், காமராசரின் இந்துத்துவ எதிர்ப்பு போன்றவைகளைப் பற்றி வரலாற்றுத் தகவல்களுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். இறுதியாக, குமாரபாளையம் வடிவேலு நன்றியுரையாற்றினார். குமாரபாளையம் நகரத் தலைவர் தண்டபாணி மற்றும் வெங்கட் நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை என்று முடிவெடுத்துள்ளதையும் இந்த செயலவை வன்மையாக கண்டிக்கிறது.

**ஆளுநர்கள் வேண்டாம்**

ஆளுநர்கள் மக்களால் தேர்வுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அல்ல. அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டு செயல்படவேண்டியவர்கள் என்று தில்லி ஆம் ஆத்மி ஆட்சி தொடர்ந்த வழக்கில் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. தமிழக ஆளுநர் ஆட்சியின் நிர்வாக பணிகளில் குறுக்கிடுவதோடு அண்மையில் தண்டனைச் சட்டத்தின் கொடூரமான 124வது பிரிவை நக்கீரன் ஏட்டின் மீது ஏவிவிட முயற்சித்தார். ஆளுநரின் அரசியல் குறுக்கீடு மற்றும் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தும் நடவடிக்கைகளை இந்த செயலவை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆளுநர் பதவிகளையே ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழகத்தில் இருந்து தொடங்கப்பட வேண்டும் என்று கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கையுள்ள அரசியல் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இந்த செயலவை அறைகூவல் விடுக்கிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th October 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN